# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**10 வயதுப்பிரிவு**
(01.01.2007 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## எமக்கு வேண்டும் எம் தாயகம்

தொன்மைச் சிறப்போடு வண்மையும், அறவழி தவறாத படை மாட்சியும், நானிலம் போற்றிய நல்லாட்சியும், வையகத்து அறிவியலில் தேர்ச்சியும், தன்னிறைவு கண்ட பொருளாதார வளர்ச்சியும், இத்தனைக்கும் சீரிய வழிகாட்டி நின்ற பெருந்தலைவனையும் பெற்று நிமிர்ந்து நின்றது எங்கள் தாயகம் தமிழீழம். எமைக் கண்டு வியந்து நின்றது வையகம்.

கடலோடும் கடல்மடி கிடைத்த பொருளோடும், வயலோடும் வயல்வெளி தந்த வனப்போடும் பொலிவு பெற்றது எம் தாயகம். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்த பண்பாட்டுச் சிறப்போடு பசுமை பெற்றது எம் தாயகத்து வாழ்வியல். அந்நியர் ஆட்சியிலும் தன்னிலை தளராது அடங்காப்பற்றாக நிமிர்ந்து நின்றது.

அல்லும் பகலும் எல்லையிலே காவல் புரிந்த வேங்கைப் படையணிகள். தொல்லைகள் இல்லாத தொலைதூரப் பயணங்கள். அச்சம் என்பதே சற்றும் இல்லாமல் சுற்றங்கள் சூழ்ந்திருந்த இனிமையான பொழுதுகள். தங்கத் தமிழ் அன்னை அகமகிழ்ந்து அமர்ந்திருந்த கல்விக்கூடங்கள். வண்ணத்துப் பூச்சிகளாய் சிறகு விரித்துத் திரிந்த கல்லூரி வீதிகள்.....

பகை முட்டும் பொழுதுகளில் பகல் இரவு பாராது, ஊன் உறக்கம் நாடாது பல காலம் பகை வாசல் காத்திருந்து, பல செய்தி சேகரித்துப் பக்குவமாய் பாதுகாத்து வெற்றிச் சமர்களுக்கு விவேகம் தந்தவரும், தரையோடும் கடலோடும் வானோடும் ஆயிரம் கதை பேசி, பெற்றவரை உற்றவரைப் பிரிந்து, தலைவன் வழிகாட்டலைச் சிரமேற்று மண்மீட்புப் போரிலே தங்கள் இன்னுயிர் ஈந்த கல்லறைத் தெய்வங்களும் உறைகின்ற துயிலுமில்லங்கள். நன்றியுடன் நவம்பரிலே செங்காந்தள் மலர் ஏந்தித் தமிழீழ தேசமே வணங்கி நின்ற பொழுதுகள்.

இவை எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்த காலத்தின் வரலாற்றுப் பதிவுகள். விழி நீர் வழிந்தோட விக்கித்து நின்றது என் தேகம்.

இப்போது விடுமுறை காலத்தில் நான் பார்த்த என் தேசத்தில் இவை எதுவுமே இல்லை. எமக்குள் நினைவுகள் மட்டுமே மிச்சமாய் நிற்க, எச்சங்கள் இன்றி அழித்தொழிக்கப்படுகிறது என் தாயகம். மேய்ப்பாரற்ற மந்தைகளாய் வழிமாறிப் போகிறது வையகத்தின் மூத்தகுடி. அடையாளம் இழந்து, பூர்வீகம் தொலைத்து, பண்பாட்டுச் சிதைவுக்குள் எம்மினத்தைத் திட்டமிட்டுத் திணிக்கிறது அரசாங்கம். அதில் சிக்கிச் சீரழிகிறது இளஞ்சமுதாயம்.

போராட்ட வாழ்வின் சுமைகளைச் சுமந்து, மண் மீட்புப் போருக்காய் தங்கள் உறவுகளைத் தந்து, தாங்க இயலாத வலிகளைத் தாங்கி, வனப்பிழந்து, வாழ்வைத் தொலைத்து வாடுகின்ற எங்கள் தேசத்து உறவுகளின் உயிரின் வலிகளுக்கு மருந்தாகி நிற்போம்.

புதிய விதியொன்று செய்யும் பயணம் பாதியில் நின்றதால் பரிதவித்து நிற்கிறது எம் இனம். பழமைச் சிறப்போடும் புலியின் நிமிர்வோடும் எமக்கு வேண்டும் எம் தாயகம்.

நன்றி,
வணக்கம்.